MC.35/2024

21.05.2026

PW1 – சங்கீதா க/பெ.பார்தீபன் (வயது 29)

எதிர்மனுதாரர் அஜரில்லை மனு அனுமதிக்கப்பட்டது.

விசாரணை தொடங்கப்பட்ட நேரம் – 12.57 P.M.

விசாரணை முடிக்கப்பட்டநேரம் – 01.31 P.M.

Solemnly affirmed by Selvi.M.K.Anusha,M.L., Chief Judicial Magistrate, Tirupathur in accordance with the provision of Act X of 1873 of the day of 21.05.2026

(குற்றவியல் நடைமுறை சட்டம் 2019 விதி 43(2)ன் கீழ் சாட்சிக்கு அவரது முதன்மை சாட்சியம் நினைவுக்கூர்வதற்காக படித்து சொல்லப்பட்டது)

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u> :-

உங்கள் கணவருடன் உடன்பிறந்த சகோதரர்கள் இருவர் உள்ளார்கள் என்றால் சரிதான். உங்கள் கணவரின் சகோதரர் இருவருக்கும் திருமணம் ஆகவில்லை என்று சொன்னால் ஒருவருக்கு ஆகிவிட்டது. உங்கள் கணவரின் சகோதரரின் ஒருவருக்கு கை இல்லை என்றால் சரிதான். நீங்கள் வாழ்ந்த காலம் முதல் உங்கள் கணவர் அவருடைய பெற்றோர்களுடன்தான் வசித்து வருகிறார் என்றால் சரிதான். தற்போதும் உங்கள் அவர் பெற்றோருடன்தான் சேரந்து வாழ்ந்து வருகிறார் என்றால் இல்லை. தற்போது நீங்கள் B.E (Computer Science) படிப்பு முடித்து விட்டு தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறீர்கள் என்றால் சரியல்ல. நீங்கள் எதிர்மனுதாரரின் வீட்டை விட்டு வெளியே வந்த இரண்டு வருடங்கள் கழித்துதான் காவல்நிலையத்தில் புகார் கொடுத்து இருந்தீர்கள் என்றால் சரியல்ல. ஒருவருடம் பின்னிட்டு புகார் கொடுத்தேன். நீங்கள் திருப்பத்தூர் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்த பிறகு உங்கள் திருமணத்தின்போது உங்களுக்கு கொடுக்கப்பட்ட நகைகள் அனைத்தும் எதிர்மனுதாரரிடமிருந்து பெற்றுக்கொண்டீர்கள் என்று சொன்னால் சில நகைகள் தான்

பெற்றுக்கொண்டேன். சில நகைகள் எதிர்மனுதாரர் வசம் உள்ளது. நகை பெற்றப்பிறகு சில நகைகள் வரவேண்டியுள்ளது என்று எதிர்மனுதாரருக்கு எதிராக காவல்நிலையத்தில் இதுநாள் வரையிலும் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். நீங்கள் முதல் விசாரணையில் தாக்கல் செய்த ம.சா.ஆ.9 எதிர்மனுதாரர் சுயசம்பாத்தியம் இல்லை என்றால் சரிதான். உங்களுடைய முதல்விசாரணை சாட்சியத்தில் 9ம் பத்தியில் 5ம் பக்கத்தில் எதிர்மனுதாரருக்கு இரண்டு கோடி ரூபாய் சொத்தை கிரயம் செய்து பெற்ற தொகைக்கு வட்டிக்கு விட்டு மாதம் ரூபாய் இரண்டு லட்சம் மேல் சம்பாதித்து சுபபோக வாழக்கை வாழ்ந்து வருவதாக சொல்லியதற்கு ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. நீங்கள் தாக்கல் செய்த ம.சா.ஆ.9-ல் ரூபாய் 40,28,500/- தான் கிரயம் தொகை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். உங்கள் முதல் விசாரணை சாட்சியத்தில் 4ம் பக்கத்தில் 7ம் பத்தியில் சொல்லியுள்ள சங்கதிகள் ஜோடிக்கப்பட்டவை என்றால் சரியல்ல. நீங்கள் உங்கள் கணவருக்கு எதிராக மாவட்ட நல்வாழ்வு துறையில் கொடுக்கப்பட்ட வன்கொடுமை புகார் விசாரணைக்கு பின்னிட்டு முடிக்கப்பட்டது என்றால் சரியல்ல. உங்கள் கணவர் தற்போது தனியார் பள்ளியில் ஓட்டுநராக பணிப்புரிந்து வருகிறார் என்றால் சரியல்ல. உங்கள் கணவர் உங்களுடன் சேர்ந்து வாழ்ந்த காலத்தில் அனைத்து வசதிகளையும் செய்துவந்தார் எனவும் நீங்கள் தான் சிறுசிறு விசயங்களுக்கு அவருடன் பிரிந்து வாழ்கிறீர்கள் என்றால் சரியல்ல. உங்கள் கணவர் தனியார் நிறுவனத்தில் மாதம் ரூ.11,000/- பெற்று வாழ்ந்து வருகிறார் எனவும் நீங்கள் அவருடைய வருமானத்தை உங்கள் மனுவில் வழக்கிற்காக வேண்டி மிகைப்படுத்தியுள்ளீர்கள் என்றால் சரியல்ல. உங்கள் கணவர்தான் தன்னுடைய பெற்றோர்களையும் பராமரித்து மருத்துவ செலவீனங்களை செலுத்தி வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. உங்கள் கணவர் தன்னுடைய கையில்லாத சகோதரர் ஒருவரையும் பாதுகாத்து பராமரித்து வருகிறார் என்றால் சரியல்ல. நீங்கள் உங்கள் கணவருக்கு எதிராக பொய் புகார் அளித்து வந்த காரணத்தினால் தான் மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளாகி

உங்களுக்கு எதிராக விவாகரத்து வழக்கு தாக்கல் செய்ய நேர்ந்தது என்று சொன்னால் சரியல்ல. உங்கள் கணவர் விவாகரத்து வழக்கு தாக்கல் செய்த பின்னர்தான் அவரை பழிவாங்கதான் ஜீவனாம்ச வழக்கை நீங்கள் தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. உங்கள் கணவர் விற்பனை செய்த சொத்தில் உங்கள் கணவர் அவருடைய பெற்றோர்கள் மற்றும் சகோதரர்கள் ஆகியோர்களுக்கும் கிரய தொகையில் பாக உரிமை உள்ளது என்று சொன்னால் சரிதான். நீங்கள் படித்து தனியார் நிறுவனத்தில் நல்ல வேலை செய்து வருகிறீர்கள் எனவும் வழக்கிற்காக வேண்டி வேலை செய்யவில்லை என்று பொய்யான சங்கதி சொல்லுகிறீர்கள் என்றால் சரியல்ல. நீங்கள் நன்கு சம்பாத்து வந்து உங்கள் தேவைகளை பூர்த்தி செய்யும் அளவிற்கு போதிய வருமான உள்ளது எனவும் அதன் காரணமாக இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

M K ANUSHA

Chief Judicial Magistrate
Digitally signed by M K ANUSHA
DN: cn=M K ANUSHA, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: Tirupathur

Chief Judicial Magistrate,
Tirupathur.